## கடற்கரை கவியரங்கு—608 நாள்:05-12-2021

### இயன்நிலை அறிவோம்!

இயற்கையோ இறையோ எழுதிய நிலையே!
மயக்கும் வாழ்வில் மருங்கிட வேண்டேன்!
இயக்கும் அறிவோ, இயன்ற நிலையோ!
தயக்கமாய் பலவும் தழைந்திட வேண்டேன்!

இயன்நிலை யாயின யாவிலும் முடிவே!
இயல்பில் மறைவதாய் ஏனிந்த வாழ்வே?
இயங்கும் அறிவும் இயங்கா நிலையாய்,
முயங்கும் நாளும் புவியினில் ஏனோ?

மயங்கும் நிலையை மாயை என்றாலும்,
மயங்கா அறிவும் தெளிவதும் உண்டோ?
மயக்கமில் கலனாய் வாழ்வை செலுத்தி,
இயங்கும் நிலையை அறிதலும் உண்டோ?

இயங்கும் இயற்கை இறைவன் என்றே;
மயக்கம் செய்து மனதைத் தேற்றி,
மண்ணில் வாழ்வதில் பயனும் உண்டோ?
கண்ணாய், மணியாய், காண்பவை நிறைய,

இல்லாதொழியும் இயன்நிலை வாழ்வே!
தொல்லை பலவும் தொடர்ந்து வந்திட,
கல்லாய் மனதைக் காண்பதும் ஒன்றே!
கள்ளாய் மனத்தில் களிப்பதும் ஒன்றே!

நில்லா மனமது நிலைதனில் தடுமாறி,
இல்லா தொழிதலை ஏற்று நிறையுமோ?
பொல்லா வாழ்வின் பொதுநிலை என்ன?
வல்லமை செய்து வகுத்ததைக் காண்போம்!

- கவிவளவன்

01-12-2021 (03.20.PM)